Collaborative Curriculum
and Assessment Framework
for Languages

Student/Registration Number

Centre Number

# 2025 Tamil Examination

## Continuers Level

**Date:** Thursday 16 October 2025, 2 pm Australian Eastern Daylight Time

- Reading time: **10 minutes**
- Working time: **2 hours**
- Total marks: **65**

### Approved materials

- Black or blue pens
- Monolingual and/or bilingual printed dictionaries

### Materials supplied

- Question-and-answer booklet

### Instructions

- You may consult your dictionaries during reading time and also during the examination.
- Write all your answers in the spaces provided in this booklet. The spaces provided give you an idea of how much you should write.
- You **must not** write during reading time.

### Contents

page(s)


**Section 1** – Responding to texts

- **Question 1** (7 marks) 3
- **Question 2** (8 marks) 4–5
- **Question 3** (15 marks) 6–9

**Section 2** – Creating texts

- **Question 4** (15 marks) 10–13
- **Questions 5 and 6** (20 marks) 14–18


© VCAA 2025

VICTORIAN CURRICULUM AND ASSESSMENT AUTHORITY

**This page is blank.**

# **Section 1** – Responding to texts (30 marks)

Allow approximately 50 minutes for Section 1.

## **Question 1** – Listening in Tamil and responding in English (7 marks)

## Instructions

- Text 1 will be played twice. There will be a short break between each playing.
- You may write notes at any time in the space provided. These notes will not be assessed.
- Listen carefully to the text and then answer the questions in **ENGLISH**.
- Responses in languages other than English will not be assessed.
- All responses **must** be based on the text.

---

**Your response will be assessed on how well you:**

- analyse general and specific relevant information, ideas, opinions, perspectives and/or aspects of texts to convey meaning.

---

**Question 1** **Marks**

Write your notes here. Notes will **not** be assessed.

**a.** What does the screen-free lunchtime initiative aim to promote? **3**

- ______________________
- ______________________
- ______________________

**b.** Identify the planned seasonal activities. **2**

- ______________________
- ______________________

**c.** How can parents get involved in these activities? **2**

- ______________________

______________________

- ______________________

______________________

## **Question 2** – Listening and responding in Tamil (8 marks)

### Instructions

- Text 2 will be played twice. There will be a short break between each playing.
- You may write notes at any time in the space provided. These notes will not be assessed.
- Listen carefully to the text and then answer the questions in **TAMIL**.
- Responses in languages other than Tamil will not be assessed.
- All responses **must** be based on the text.

---

**Your response will be assessed on how well you:**

- analyse general and specific relevant information, ideas, opinions and/or perspectives to convey meaning.

---

**Question 2** **Marks**

**a.** What arguments does the daughter make to persuade her father? **5**

தனது தந்தையைச் சம்மதிக்கவைப்பதற்கு மகள் என்ன வாதங்களை முன்வைக்கிறாள்?

Write your notes here. Notes will **not** be assessed.

Marks | Write your notes here. Notes will **not** be assessed.

**b.** According to the conversation, what challenges may she face? **3**

இந்த உரையாடலின்படி, அவள் என்ன சவால்களை எதிர்கொள்ளக்கூடும்?

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

**Question 3** – Reading and listening in Tamil, responding in English (15 marks)

## Instructions

- This question consists of a reading text, Text 3A, and a related listening text, Text 3B.
- You have 5 minutes to read Text 3A. At the end of the 5 minutes, Text 3B will be played. The text will be played twice. There will be a short break between each playing.
- You may write notes at any time in the space provided. These notes will not be assessed.
- Answer the questions in **ENGLISH**.
- Responses in languages other than English will not be assessed.
- All responses **must** be based on the text(s).

---

**Your response will be assessed on how well you:**

- analyse general and specific relevant information, ideas, opinions, perspectives and/or aspects of texts to convey meaning
- synthesise relevant information, ideas, opinions and/or perspectives from different texts.

---

## Text 3A

**பன்னிலம் இல்லம்**

பன்னிலம் இல்லம் உங்களை அன்புடன் வரவேற்கிறது. இந்த இல்லத்துக்கு நீங்கள் புதியவராகவோ, சிலசமயங்களில் வந்துசெல்பவராகவோ அல்லது எமது வழமையான விருந்தினராகவோ எவ்வாறிருப்பினும், இந்தத் தகவல் தொகுப்பு உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருப்பதுடன் உங்களுடைய பாதுகாப்புக்கும் பொழுதுபோக்கிற்கும் உங்களது பணத்தை மீதப்படுத்தவும் உதவியானதாக இருக்கும்.

பன்னிலம் கண்ணைக் கவரும் காட்சிகளான மழைக்காடுகள், அழகான மணற்பாங்கான கடற்கரைகள், என்றுமே நீர் வடியும் உயர்ந்த நீர்வீழ்ச்சிகள் என்பவற்றால்சூழப்பெற்ற ஒரு பிரதேசமாகக் காணப்படுவதுடன் எமது இல்லத்தினருகே செறிவான கண்டல் தாவரங்களையும் காணக்கூடியதாகவுள்ளது.

மேலும் எமது இல்லத்தினருகில் விலங்குகள் சரணாலயம் ஒன்று நீலநாக்கு ஓணான்கள், ஆமைகள், தவளைகள், தும்பிகள், வௌவால்கள் பல்வேறுவகையான பறவைகள் என்பவற்றைக் கொண்டதாக அமைந்துள்ளது. இந்தச் சரணாலயம் இந்தப்பகுதியில் காயத்துக்குள்ளாகின்ற வனவிலங்குகளின் மீட்புநிலையமாகவும் செயற்படுகிறது.

ஆனால் எமது இல்லத்துக்குச் சிறிதுதொலைவிலுள்ள நிலப்பரப்புகளில் பல வனவிலங்குகள் காணப்படுகின்றன. தயவுசெய்து அவற்றைத் தொடவோ அவற்றுக்கு உணவூட்டவோ வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம். ஏனெனில் அவற்றிற்சில மோசமான கடியை உண்டுபண்ணக் கூடியவை. உங்கள் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு நீங்கள் அவைகளைத் தனியாகவிட்டுத் துரவிலகி அவற்றை அவைபாட்டிலேயே விட்டுவிடுமாறு ஆலோசனை கூறுகின்றோம்.

**Text 3A – continued**

மேலும் இந்தவிலங்குகளுக்குப் பொருத்தமான வாழிடங்களை மீளவும் நாங்கள் அமைத்துவருகின்றமையால் மரமொன்றை நடுவதற்கு முன்வருமாறு உங்களை அழைக்கிறோம்.

எமது விருந்தினர்கள் நீர்வீழ்ச்சியில் அல்லது கடலில் குளிக்கவிரும்பினால் அவர்களை அழைத்துச் செல்வதற்கான நேரம் ஒதுக்கித்தரப்படும். வரவேற்பாளரை முதல்நாளே தொடர்புகொண்டு அங்கு செல்வதற்கான ஒழுங்குளைச் செய்துகொள்ளுங்கள். எமது விருந்தினர்கள் நீர்வீழ்ச்சியில் குளிக்கவிரும்புவராயின் அங்குள்ளபாறைகள் வழுக்கும் தன்மையுள்ளவை என்பதைத் தெரிந்துகொள்ளல் வேண்டும். பாதுகாப்புக்காக வழுக்காதபாதணிகளை அணிந்துகொண்டு செல்வதோடு உரிய நடைபாதைகளையும் பயன்படுத்துங்கள்.

கடற்கரையில் நீந்தும்போது அதற்காக ஒதுக்கப்பட்ட இடங்களிலேயே நீந்துங்களென்று உங்களுக்கு ஆலோசனை கூறுகிறோம். மற்றையபகுதிகள் வள்ளங்களுக்கும் அதிவேகப்படகுகளுக்கும் மிகவும் பிரசித்திபெற்றிருப்பதால் அவை அங்கே நீந்துவோருக்கு ஆபத்தைவிளைவிக்கும்.

சென்றநூற்றாண்டில் இந்தக் கடற்பகுதி, கடல்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கத்துக்கு மிகவும் பொருத்தமான வளம்மிக்க இடமாக இருந்தது. பின்னர் காலப்போக்கில், உயிரினங்களின் எண்ணிக்கை பெருமளவில் வீழ்ச்சியடைந்துவந்ததனால் இப்போது இங்கே மீன்பிடிப்பது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்தக் கடற்கரைக்கு நீங்கள் சென்றீர்களானால் தயவுசெய்து திரும்பிவரும்போது உங்கள் கழிவுகளை நீங்களே எடுத்துக்கொண்டு வந்துவிடுங்கள். அல்லாவிடின் அவை நீர்நிலைகளைச் சென்றடைந்து கடல்வாழ் உயிரினங்களுக்குத் தீங்குவிளைவித்துவிடும்.

இந்த இல்லத்தில் உணவு, பானங்கள் தயாரிப்பதற்குச் சமையலறைப்பகுதியில் ஒரு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. விருந்தினர்கள் தேநீர் கோப்பி என்பவற்றை இலவசமாகத் தயாரித்துக் கொள்ளலாம். உண்பதற்கும் சமைப்பதற்கும் தேவையான பாத்திரங்களும் கருவிகளும் அங்கேவைக்கப்பட்டுள்ளன. உபயோகித்ததன் பின்னர் அவற்றையும் அந்த இடத்தையும் விலங்குகளைக் கவரக்கூடிய எந்தவிதமான உணவுக்கழிவுகளும் இல்லாமல் சுத்தமாக வைத்திருக்கவேண்டியது உங்களது பொறுப்பாகும். இது அப்பகுதியிலுள்ள விலங்குகள் நோய்வாய்ப்படுதலிலிருந்து பாதுகாக்கும். சுத்தமாக வைத்திருக்காவிடில் அபராதம் செலுத்தவேண்டியிருக்கும்.

**Question 3** **Marks**

Write your notes here. Notes will **not** be assessed.

**Text 3A**

**a.** What is special about the area around Pannilam Inn? **2**

**b.** What safety advice is provided in the compendium? **3**

**Text 3B**

**c.** What research does Aran plan to do while staying at the inn? **3**

**Texts 3A and 3B** **Marks**

Write your notes here. Notes will **not** be assessed.

**d.** Using information from both texts, summarise how the wildlife in this region has been affected by human activity and interaction. **7**

**End of Section 1**

## **Section 2** – Creating texts (35 marks)

Allow approximately 70 minutes for Section 2.

**Question 4** – Reading and responding in Tamil (15 marks)

### Instructions

- Read Text 4 and write a response of approximately 150 words in **TAMIL**.
- Question 4 is phrased in both English and Tamil.
- Responses in languages other than Tamil will not be assessed.

---

**Your response will be assessed on how well you:**

- analyse relevant information, ideas, opinions and/or perspectives from the stimulus text(s)
- respond to the question appropriately for the context, purpose and audience
- use appropriate language structures and vocabulary accurately.

---

### Text 4

**உலகத் தமிழ் மாணவர் இணையம்**

உலகெங்கும் வாழுகின்ற தமிழ் கற்கும் மாணவர்களுக்கு ஒரு பொது இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம்பேசும் நாடொன்றில் வாழுகின்ற தனதுபெயரைக் குறிப்பிடவிரும்பாத தமிழ்த்தந்தை ஒருவர் பெரும் பணச்செலவில் இதற்கான முன்னேற்பாட்டைச் செய்துள்ளார். அதுமட்டுமன்றி, தமிழ்நாடு, ஈழம், சிங்கப்பூர், மலேசியா, ஒஸ்ரேலியா உட்பட 37 பிரதேசங்களிலுள்ள ஆறாம் வகுப்பிலும் அதற்குமேற்பட்ட வகுப்புகளிலும் கற்கின்ற தமிழ் பேசக்கூடியமாணவர்கள் இணையக்கூடியவகையில் உரிமமும் பெற்றுள்ளார்.

அந்தந்தப்பகுதிகளில் 6–12 வகுப்புக்களில் நடைபெற்ற தமிழ்ப்பரீட்சைகளில் அதிகபுள்ளிகளைப்பெற்ற பல மாணவர்களுடனும் தமிழை ஊக்கமாகக்கற்கின்ற இளைஞர்களுடனும் கலந்தாலோசித்து, இணையத்தின் நோக்கங்களையும் இணைகின்ற அங்கத்தவர்கள் பின்பற்றவேண்டிய நடைமுறைகளையும் தொகுத்துள்ளார்.

எடுத்துக்காட்டாகச் சில:

பிறமொழிக் கலப்பெதுவுமில்லாமல் தமிழைப் பேசுதலும் எழுதுதலும்.

பொதுவாகத் தமிழில் உச்சரிப்புவேறுபாடுகளில் ஐயம் ஏற்படுகின்ற ‘ழ’, ‘ள’, ‘ல’ முதலிய எழுத்துக்களை உலகம் முழுவதிலுமுள்ளவர்கள் தொல்காப்பியத்தில் விளக்கப்பட்டவாறு ஒரேவிதமாக உச்சரித்தல்.

**Text 4 – continued**

சங்ககால இலக்கியங்கள், திருக்குறள் முதலான புத்தகங்களில் காணப்படுகின்றனவும் தற்போது பயன்பாட்டிலதிகம் இல்லாதனவுமான சொற்களை அழிந்துபோகவிடாமல் மீண்டும் பயன்பாட்டுக்குக் கொண்டுவந்து, எதிர்காலத்தில் எவரும் அப்புத்தகங்களை எளிதாக வாசிக்க வழிசெய்தல்.

மேலும், அவற்றிலிருந்து விஞ்ஞானம், தொழில்நுட்பம், முகாமைத்துவம் முதலியவற்றின் வளர்ச்சிகாரணமாகப் பிறமொழிகளில் உருவாகும் புதியசொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச்சொற்களைத் தேடிக்கண்டுபிடித்து, அவற்றை உலகளாவப்பயன்படுத்துதல். கிடைக்காவிடின், பொருத்தமான காரணப்பெயர்களையோ அல்லது இலக்கணவிதிப்படி புதிய இடுகுறிப்பெயர்களையோ தமிழில் உருவாக்குதல்.

அழகான எமது பாரம்பரியத் தமிழின் உபயோகத்தை மீட்டெடுக்க இன்றே எம்முடன் இணைந்துகொள்ளுங்கள்!

You may make notes in this space. These notes will **not** be assessed.

**Question 4**

You are in Year 12 and studying Tamil. After reading the pamphlet on pages 10 and 11, you are inspired to sign up. Write a blog post persuading your peers to join you in restoring the use of traditional Tamil language.

நீர் 12ஆம் வகுப்பில் தமிழைப் படிக்கின்ற ஒரு மாணவர். இங்குள்ள 10ஆம் 11ஆம் பக்கங்களிலுள்ள பிரசுரத்தை வாசித்தபின்னர், இதில் இணைவதற்கு ஆர்வமுடையவராக இருக்கிறீர். பாரம்பரியத் தமிழ்ப்பயன்பாட்டை மீட்டெடுக்க உம்முடன் இணைந்துகொள்ள முன்வருமாறு உமது சகாக்களை வற்புறுத்துகின்ற ஒருபதிவை எழுதுக.

## **Questions 5 and 6** – Writing in Tamil (20 marks)

### Instructions

- Question 5 and Question 6 are written in English and Tamil.
- Choose **one** question, either Question 5 **or** Question 6.
- Write a response of approximately 250 words in **TAMIL**.
- Responses in languages other than Tamil will not be assessed.

---

**Your response will be assessed on how well you:**

- create text appropriate for the context, purpose and audience
- demonstrate depth of treatment of information, ideas, opinions or perspectives
- sequence information, ideas, opinions or perspectives cohesively
- use a range of appropriate language structures and vocabulary
- use vocabulary and language structures accurately.

---

**Question 5** (20 marks)

Imagine you are one of the people in this image and write an imaginative story from the perspective of this person for a young writers' competition. The winning story will be published in a well-known youth magazine.

இந்தக் காட்சியில் உள்ள மக்களில் நீரும் ஒருவர் என்று கற்பனைசெய்துகொண்டு அவரதுபார்வையிலிருந்து கற்பனைக்கதை ஒன்றை இளம் எழுத்தாளர்களுக்கான போட்டியில் பங்குபற்றுமுகமாக எழுதுக. வெற்றிபெறும் கதை பிரசித்திபெற்ற இளைஞர்சஞ்சிகை ஒன்றில் வெளியிடப்பெறவுள்ளது.




Source: Daniel Prudek/Shutterstock.com

**OR**

**Question 6** (20 marks)

Tamil-speaking people who migrated to Australia continue to contribute to the growth of the country. Write an informative article for a local newspaper about a Tamil-speaking person who has been recognised for their contribution to Tamil-speaking communities in Australia.

ஒஸ்ரேலியாவில் குடியேறிய தமிழ்பேசும் மக்கள் இந்தநாட்டின் வளர்ச்சிக்குப் பல பங்களிப்புகளைச் செய்துவருகிறார்கள். இவ்வாறாக, ஒஸ்ரேலியத் தமிழ்பேசும் சமூகங்களுக்குச் செய்த பங்களிப்புக்காகப் பாராட்டுக்குரியவர் என்று அங்கீகரிக்கப்பெற்ற தமிழ்பேசும் ஒருவரைப்பற்றிய தகவல்களை வழங்குகின்ற ஒரு கட்டுரையை உள்ளூர்ச் செய்தித்தாளுக்காக எழுதுக.

You may make notes in this space. These notes will **not** be assessed.

Select either Question 5 **or** Question 6 by placing a tick (✓) in one of the boxes below.

Question 5 ☐ Question 6 ☐

**End of examination questions**

**Extra space for responses**

Clearly **number** all responses in this space.

© Victorian Curriculum and Assessment Authority 2025